***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi***
***CC.No. 30/2023– P.W. 1 (LW.1)***

| | |
|---|---|
| *Name* | பெர்ணான்டஸ் |
| *Father/Husband's Name* | ஆரோக்கியசாமி |
| *Village* | பட்டிமார் |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *46* |

*A2* **எதிரி ஆஜர். A1 ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 02.09.2024.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி சம்பவத்தின் போது பார்த்து இருக்கிறேன். கடந்த 12.10.2022 ஆம் தேதி மாலை 06 மணியளவில் கெழுவத்தூரில் நெல் மூட்டைகளை விற்றுவிட்டு பாமணி ஆற்றில் குளிப்பதற்காக இறங்கினேன். சம்பவம் நடப்பதற்கு 1 மாதத்திற்கு முன்பு பெருகவாழ்ந்தான் மண்ணுக்குமுண்டான் ரோட்டில் ஆஜர் 2 வது எதிரி குடிப்போதையில் என்னிடம் தகராறு செய்தார். அதன்பிறகு சம்பவத்தின் அன்று குளத்தில் இறங்கிய போது ஆஜர் 2 வது எதிரி இருசக்கர வாகனத்தில் குளத்திற்கு வந்தார். வண்டியில் வைத்திருந்த டார்ச் லைட்டை எடுத்து என்னுடைய இடது காதில் வெட்டினார். நீதிமன்றத்தில் காட்டப்படும் டார்ச் லைட் தான் எதிரி என்னை வெட்டினார். **சான்று பொருள் அ.சா.பொ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஆஜர் 2 வது எதிரி வெட்டியதில் எனது இடது காது அறுந்து இரத்தம் கசிந்தது. அதன் பிறகு அருகில் இருந்தவர்கள் அங்கு வந்த உடன் ரோட்டில் ஓட ஆரம்பித்தேன். பிறகு 1 வது எதிரி ஜீவானந்தம் சம்பவ இடத்திற்கு வந்து என்னை துரத்தினார்கள். எதிரிகள் என்னை தேவடியா மகனே குச்சிகாரி மகனே ஊருக்குள் எப்படி வருவ என தகாத வார்த்தைகளால் திட்டினார்கள். பிறது அவர்கிளடம் இருந்து நான் தப்பித்து நீந்தி

கரையேறி மன்னார்குடி தலைமை அரசு மருத்துவமனைக்கு சென்று உள்நோயாளியாக சிசிக்சையில் சேர்ந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

2. நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. முதல் விசாரணையில் சொன்ன விவரங்களை தான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆஜர் எதிரி நடந்ததாக சொல்லப்படும் தினத்தன்று தான் முதன் முதலாக பார்த்தேன் என்று சொன்னால் சரிதான்.

2. சம்பவம் நடந்த பிறகு நான் உடனடியாக மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன் என்று சொன்னால் சரிதான். அ.சா.ஆ 1னை நான் கையொப்பம் செய்து கொடுக்க பெருகவாழ்ந்தான் காவல்நிலையத்தில் எனது உறவினர்கள் தான் கொடுத்தார்கள் என்று சொன்னால் சரிதான்.

3. சம்பவம் முடிந்த பிறகு நான் NAH தனியார் பேருந்தில் ஏறி தப்பிக்க முயன்றபோது ஆஜர் எதிரியும், அவருடன் இன்னும் 2 பேரும் பேருந்தை மறைத்து விவரத்தினை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். தென்பரை பாலம் அருகே தான் பிரச்சனை என்ற விவரத்தினை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

4. ஆஜர் எதிரி என்னை தாக்கியதாக சொல்லப்படும் டார்ச் லைட்டானது நீதிமன்றத்தில் காட்டப்படும் சான்று பொருள் 1னா டார்ச் லைட்டை விட நீளமானது என்று சொன்னால் சரிதான். நீதிமன்றத்தில் காட்டப்படும் சான்று பொருளை காண்பித்து காவல்நிலையத்தினர்கள் என்னிடம் விசாரணை செய்யவில்லை எ்னறு சொன்னால் சரிதான். இதைவிட பெரிய நீட்டினால் கத்தி போல அமைப்புடைய டார்ச் லைட்டை காண்பித்து விசாரணை செய்தார்கள்.

5. சம்பவம் நடந்து முடிந்த பிறகு தான் மற்ற நபர்கள் அங்கு வந்தார்கள் என்று சொன்னால் சரிதான். மருத்துவரிடம் சிசிக்சைக்கு செல்லும் போது எனக்கு சுயநினைவு இருந்தா என்றால் இருந்தது. எனக்கு எண்ணிக்கை குறித்த விபரம் தெரியுமா என்றால் தெரியும். டார்ச் லைட், கம்பி, கத்தி ஆகியவற்றிக்கு இடையேயான வித்தியாசம் தெரியுமா என்றால் தெரியும்.

6. நடந்ததாக சொல்லப்படும் சம்பவத்தின் அன்று இரவே ஆஜர் எதிரியின் மீதும், மற்ற 5 பேர் மீதும் பெருகவாழ்ந்தான் காவல்நிலையத்தினரால் அக்காவல்நிலைய

காவலரை அடித்ததாக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். அக்காவலரை அடித்ததாக வழக்கு பதிவு செய்யப்பட்டது பின்னர் தான் நான் கொடுத்த புகாரிலும் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான்.

7. நடந்ததாக சொல்லப்படும் சம்பவ இடமானது கற்கள், கம்பிகள் போன்றவைகள் கிடக்கும் பகுதி என்று சொன்னால் சரிதான். எதிரிகள் மீதுள்ள பழைய பகையின் காரணமாக அவர்களை தாக்க முற்பட்டு அப்போது தவறி கீழே விழுந்து அதன் மூலம் ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரிகள் மீது ஒரு பொய்யான புகார் ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

8. சம்பவ இடத்திற்கும் எனது வீட்டிற்கும் இடையே சுமார் 10 கி.மீ தூரம் இருக்கும் என்று சொன்னால் சரிதான். எதிரிகள் மீதுள்ள கோபத்தின் காரணமாக அவர்கள் மீது வேண்டுமென்றே காவல்துறையினரின் துணையோடு கொடுக்கப்பட்ட பொய்யான புகாரின் பேரில் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

M SURESHKARTHIK

Digitally signed by M SURESHKARTHIK
Date: 2024.09.02 18:08:01 +0530

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.

***DEPOSITION OF WITNESS***

***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi***

***CC.No. 30/2023– P.W. 2 (LW.2)***

| | |
|---|---|
| *Name* | அன்புரோஸ் |
| *Father/Husband's Name* | பத்திநாதன் |
| *Village* | பட்டிமார் |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *48* |

***A2* எதிரி ஆஜர். A1 ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 02.09.2024.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். அசா 1 எங்கள் ஊரை சேர்ந்தவர். எதிரிகளை சம்பவத்திற்கு முன்பு எனக்கு தெரியாது. சம்பவத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பு பெருகவாழ்ந்தான் மண்ணுக்குமுண்டான் ரோட்டில் அசா 1க்கும் எதிரிகளுக்கும் வாய்தகராறு ஏற்பட்டது . நான் தான் சமாதானம் செய்து வைத்து அனுப்பி வைத்தேன். அதன்பிறகு 12.10.2022 ஆம் தேதி பாலையூரில் அசா 1னை ஆஜர் 2 வது எதிரி அடித்து விட்டதாக கேள்விபட்டேன். பிறகு இது சம்பந்தமாக காவல்நியைம் சென்று புகார் அளிக்க சென்றேன். பிறகு அசா 1க்கு காதில் அடிப்பட்டு இரத்தம் வந்தது. பிறகு அவரை மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. முதல் விசாரணையில் சொன்ன விவரங்களை தான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் போலிசார் என்னை எதுவும் கேட்கவில்லை விசாரணை செய்யவும் இல்லை. புகார்தாரர் மற்றும் எதிரிகளுடைய

பிரச்சனை பற்றி எனக்கு தெரியாது. நான் நேரிட்டு பார்க்கவில்லை என்று சொன்னால் சரிதான்.

2. அசா 1 ன் தம்பி சொல்லி தான் மேற்படி சம்பவம் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான். புகார் கொடுக்க செல்லும் போது அசா 1 காவல்நிலையத்திற்கு வந்தாரா என்றால் எனக்கு முன்பே அங்கு இருந்தார். அசா 1 எனது ஊர்க்காரர் மற்றும் வேண்டப்பட்டவர் என்று சொன்னால் சரிதான். அதனால் இந்த வழக்கில் என்னை சாட்சியாக சேர்த்துள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். போலிசார் சொல்லிக்கொடுத்ததன் அடிப்படையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

M SURESHKARTHIK Digitally signed by M SURESHKARTHIK Date: 2024.09.02 18:08:17 +0530

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.